10.01.2024

**OS. 343 / 2023 வா. சா. 1. குமரேசன் , த/பெ. அடைக்கன்**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

**1 முதல் 4 , 6 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1 ம் வாதி சிகப்பி என் தாயார் என்றால் சரிதான். 3 முதல் 5 வாதிகள் செல்வம், அழகு, சாவித்திரி ஆகியோர் என் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். என் தகப்பனார் பெயர் அடைக்கன் என்றால் சரிதான். என் தகப்பனார் அடைக்கனுடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் யாருமில்லை., என் அப்பா மட்டும்தான். என் அப்பாவின் அப்பா பெயர் என்னவென்றால் வெ.அடைக்கன். என் தாத்தாவின் அப்பா பெயர் என்னவென்றால் வெள்ளக்குட்டி. என் தாத்தா அடைக்கனுக்கு என் தகப்பனார், என் சித்தப்பா சின்னகருப்பன் ஆகியோர் வாரிசுகள் என்றால் சின்னகருப்பன் என் தாத்தாவிற்கு பிறக்கவில்லை. என் வழக்குரையிலும் அவ்வாறு தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் செல்லையா, ராமன் உள்ளிட்ட அனைவரும் எங்கள் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதிகளின் மூதாதையர் பெயர்கள் எனக்கு தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். எதற்காக வழக்கு போட்டுள்ளேன் என்றால் எங்கள் தாத்தா சொத்து எங்களுக்கு வேண்டும் என்று போட்டுள்ளேன். வழக்கு சொத்தில் மொத்தம் எத்தனை வீடுகள் உள்ளன என்றால் 10 வீடுகள் உள்ளது. அந்த 10 வீடுகளும் தார்சு வீடுகளா என்றால் தார்சு வீடு, ஓட்டு வீடு என எல்லாம் கலந்து உள்ளது. நான் இந்த வழக்கு போடுகையில் இந்த வீடுகள் எல்லாம் இருந்தது என்றால் சரிதான். தார்சு வீடுகளின் குறைந்த பட்ச மதிப்பு ரூ.10 லட்சம் வருமா என்றால் அவ்வளவு இருக்க வாய்ப்பில்லை. அந்த வீடுகளின் மதிப்பை நான் இவ்வழக்குரையில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் புல எண் தற்போது மாறியுள்ளதா அல்லது ஆரம்பத்தில் இருந்து ஒரே எண்ணா என்றால் ஆரம்பத்தில் இருந்து ஒரே எண்தான். செட்டில்மென்ட் , ரீ செட்டில்மென்ட் காலத்திலும் வழக்கு சொத்தின் புல எண் 7/1 என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் மற்றும் அவர்களது வாரிசுகள் எப்பொழுது வீடுகள் கட்டினார்கள் என்று சரியாக சொல்லமுடியுமா என்றால் 2018 லிருந்து. என் வழக்குரையிலும் 2018 ல் தான் இந்த பிரதிவாதிகள் வீடுகள் கட்டினார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் தகப்பனாரோடு சின்னக்கருப்பன் பிறக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, சின்னக்கருப்பன் செல்லாயி என்பவரை திருமணம் செய்து அந்த செல்லாயி தற்போதும் உயிருடன் உள்ளார் என்றால் இல்லை. என் சித்தப்பா சின்னக்கருப்பன், செல்லாயிக்கு குமார் , சரவணக்குமார் என்ற 2 மகன்கள்

உள்ளார்கள் என்றால் இல்லை.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**